**செ.வெ.எண்:01** **நாள்:02.07.2018**

# அரியலூர் மாவட்டத்தில் ரூ.3 கோடியே 21 இலட்சத்து 58 ஆயிரம் மதிப்பில் அரசு உயர்நிலைப்பள்ளி கட்டிடங்கள் திறப்பு.

அரியலூர் மாவட்டம், திருமானூர் ஊராட்சி ஒன்றியம், சன்னாவூர் மற்றும் தூத்தூர் அரசு உயர்நிலைப்பள்ளிகளில் புதியதாக கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறை கட்டிடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு.எடப்பாடி.கே.பழனிசாமி** அவர்கள் இன்று (02.07.2018) காணொலிக்காட்சி மூலம் திறந்து வைத்தார்கள்.

இப்பள்ளிக்கட்டிடங்களை, மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தலைமையில், சிதம்பரம் நாடாளுமன்ற உறுப்பினர் **திரு.எம்.சந்திரகாசி** அவர்கள் முன்னிலையில் குத்துவிளக்கேற்றி, தொடங்கி வைத்தார்கள்.

**இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்தாவது,** அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின்கீழ் சன்னாவூர் அரசு உயர்நிலைப்பள்ளியில் ரூ.1 கோடியே 60 இலட்சத்து 77 ஆயிரம் மதிப்பிலும், தூத்தூர் அரசு உயர்நிலைப்பள்ளியில் ரூ.1 கோடியே 60 இலட்சத்து 81 ஆயிரம் மதிப்பிலும் பள்ளிகளுக்கு கூடுதல் வகுப்பறை கட்டிடங்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இன்று காணொலிக்காட்சி மூலம் திறந்து வைத்துள்ளார்கள் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் முனைவர்.அ.புகழேந்தி, உதவி செயற்பொறியாளர் (பொதுப்பணித்துறை கட்டிடங்கள்) வேல்முருகன் மற்றும் பள்ளித் தலைமையாசிரியர்கள், ஆசியர்கள், மாணவ, மாணவியர்கள் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**